**II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,**

**THIRUVALLUR AT POONAMALLEE**

**S.C. NO. 84 / 2019**

**Deposition of witness for the Defendant side Witness P.W. 2**
**solemnly by Tmt. R.Priya Assistant**
**in accordance with the provision of Act I for 1873 on 15.10.2019.**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **Meri** | | **Caste** |
| **Husband Name** | **Sambath** | | **Calling** |
| **Age** | **52** | | **Religion** |
| **Village** | | | **Taluk** |

ஏ1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி—

15.7.2018 அன்று இரவு சுமார் 10.30 முதல் மறுநாள் அதிகாலை 4.00 மணி வரை அவர் படுக்க வைக்கப்பட்டிருந்த காரிலேதான் மருத்துவமணைக்கு அழைத்து சென்று திருப்ப கொண்டுவந்தோம். மருத்துவமணையில் வந்த பிரகு இரக்கி விட்டு பிரகு காரில் வீட்டிற்கு எதிரே உள்ள கம்பெனிக்குள் விட்டிருந்தோம். அந்த காரில் இருக்கும் பொருட்களை எப்போது எடுத்து வைத்தேன் என்றால் நான் எந்த பொருளையும் எடுத்து வைக்கவில்லை. நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் காரை பார்த்தார்களா என்றால் இல்லை. இறந்த இடத்தில் தான் போய் பார்தார்கள். புகார் கொடுத்த பிறகு கார் சீட்டு, அதன் பின்புறம் ஆகியவற்றை போலீசார் பார்க்கவில்லை. தற்போது அந்த காரை விற்று விட்டோம். காவல் நிலையத்தில் சி.சி.டிவி கேமராவை போட்டு காட்டியபோது 2 கேமராக்களை கைப்பற்றியாதாக சொன்னார்கள். அந்த 2 கேமராக்களில் ஓடிய காட்சிகளை சுமார் அரை மணி நேரம் பார்திருப்பேன் என்றால் சரி. 15.7.2018 ல் கார் நிருத்திவைக்கப்பட்டிருந்த இடத்தில் மாலை 7.00 மணி முதல் இரவு 10.30 மணி வரை பதிவாகியுள்ள காட்சிகளை முழுமையாக பார்தேன். 15.7.2018 அன்று 22.3, 36 நொடி நேரத்தில் கேமரா 5 ல் பதிவாகியுள்ள காட்சிகள் சாட்சிக்கு காண்பித்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. அந்த நேரத்தில் தான் கார் நிருத்த பட்டிருந்த இடத்திற்கு வருகிறேன் என்றால் சரி. நான் வரும்போது காருக்கு முன்னால் என் மகன் கிடக்க வில்லை. அதற்கு முன்பே என் மகனை காரில் கிடத்திவிட்டார்கள் என்றால் சரி. நான் காருக்குள் தான் என் மகனை பார்தேன். என் மகனின் செல்போனையும் லைசைன்சையும் நான் வாங்கிகொண்டேன். புகார் கொடுத்த பிறகு என் மகனின் செல்போனை போலீசார் வாங்கி கொண்டார்கள். அது சிரிய செல்போன். 22.03. 45 மணிக்கு என்னுடைய மருமகள் அ.சா.1 அந்த இடத்திற்கு வருகிறாள் என்றால் சரி. நான் 1 நிமிடம் 10 நொடியில் 22. 04. 55க்கு திருப்பி செல்கிறேன் என்றால் சரி. நான் முதல் விசாரணையில் நாங்கள் தண்ணீர் தெளித்து எழுப்பி பார்தோம் என்று சொல்லி உள்ள நிலையில் அப்படி பதிவு ஏதும் இருக்கிறதா என்று பார்த்து சொல்லுங்கள்

என்றால் தண்ணீர் தெளித்து எழுப்பிபார்தோம் என்று அங்கிருந்த நபர்கள் சொன்னார்கள். நான் வந்த உடன் தண்ணீர் கேட்டேன் அதற்கு நாங்கள் தண்ணீர் தெளித்து பார்த்துவிட்டோம் என்று அங்கிருந்த நபர்கள் சொன்னார்கள். 21.54 மணிக்கு என்மகனை தூக்கும் நபர்கள் அந்த இடத்திற்கு வந்து விடுகிறார்கள் என்றால் சரி. நான் வருவதற்கு 9 நிமிடத்திற்கு முன்பு அங்கு வந்த நபர்கள் என்னுடைய மகன் வாந்தி எடுத்ததாகவோ சிறுநீர் கழித்ததாகவோ என்று சொன்னார்களா என்றால் இல்லை. தணிணீர் தெளித்ததாக தான் சொன்னார்கள். கேமரா 5. ல் முழு பதிவிலும் காரின் முன் பகுதியின் ஒரு பகுதிதான் தெரிகிறது என்றால் சரி. கேமரா 5ல் காரின் டிரைவர் சீட் பக்கம் உள்ள பக்கவாட்டில் எதுவும் தெரியவில்லை என்றால் சரி. 20.53.13 பதிவில் ஒரு நபர் காரின் முன் பக்கம் வந்து நிற்கிறார் என்றால் சரி. 20.55 ல் அந்த நபர் திரும்பிபோகிறார் என்றால் சரி. அது யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. 20.53.20 நொடியில் 3நபர்கள் காரை நோக்கி வந்து விட்டு திரும்பிச்செல்கின்றனர் என்றால் சரி. அந்த மூன்றுபேர் யார் என்று எனக்கு தெரியாது. இது பொது வழி பலபேர் வந்து போவார்கள். 20.55.50 மணி பதிவில் காருக்கு முன்பு 2பைக், 3நபர்கள் நிற்கிறார்கள் என்றால் சரி. 21.06 பதிவில் அந்த மூன்று பேரும் காருக்கு முன்பிருந்து கிளம்பிவிட்டார்கள் என்றால் சரி. அங்கிருந்து சென்ற மூனறு நபர்கள் அடையாளம் தெரியாது. 21.29.10 நொடிக்கு பிறகு காருக்கு பின் பக்க பக்கவாட்டில் குதித்து வரும் 2 நபர்கள் யார் என தெரியாது. தற்போது நான் பார்த்தமேற்சொன்ன காட்சிகளை போலீசார் காண்பித்து இவர்கள் யார் என்று என்னை விசாரித்தார்கள். நான் தெரியாது என்று கூறினேன். கேமரா 2 பதிவில் உள்ள காட்சிகளில் காரின் டிரைவர் இருக்கை பக்கம் பக்க வாட்டில் யார் இருக்கிறார்கள் என்ற நடக்கிறது தெரியவில்லை என்றால் சரி. மேற்சொன்ன காட்சிகளையும் காவல் நிலையத்தில் பார்தேன். ஒரு முறைதான் பார்தேன். நான் சிசிடிவி பதிவுகளில் தெளிவாக தெரியாத விசயங்களையும் நடக்காத நிகழ்வுகளையும் மிகை படுத்தி முறன்பாடுடன் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரில்ல. நீங்கள் முதல் விசாரணையில் 1வது எதிரி கார் மீது 2டம்லர் வைத்து சரக்கை எடுத்து ஊற்றி அதன் பிறகு தண்ணீர் ஊற்றி அதன் பிறகு பாண்ட் பாக்கட்டில் இருந்து ஏதோ ஒரு பெளடரை எடுத்து ஒரு டம்ளரில் மட்டும் கலக்குகிறார் என்று சொன்னதும் கலந்த டம்ளரை என் மகனிடம் கொடுத்து என் மகன் அதை குடிக்கிறார் என்றும் சிசிடிசவி பதிவுகளில் கண்ணில் பார்பதற்கு தெரியாத விசயத்தை தெரிகிறது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15.7.2018 இரவு 8.27 முதல் 9.27 வரை கார் நிருத்தும் இடத்தில் என் மகன் இல்லத நேரத்திலோ, அன்று இரவு 10.30 மணிமுதல் மறுநாள் காலை 4.00 வரை காரில் அவரை படுக்க வைக்கப்பட்டிருந்த நேரத்திலோ என்மகனின் மரணத்திற்கு காரணமான ஏதாவது சம்பவம் நடந்திருக்கலாம் என்றாலும் அறக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 13.7.2018 மாலை 5.00 மணிக்கு முதல் எதிரி உங்கள் வீட்டிற்கு வந்து மிரட்டி விட்டு சென்றிருந்தால் எங்களின் உறவினர்கள் ஆன முதலாம் எதிரியின் குடும்பத்தினரிடம் அதை பற்றி கூறியிருப்பேன் என்றாலும் அல்லது போலீசிடம் உடனே புகார்கொடுத்திருப்பேன் என்றாலும், அல்லது என் மகன் இறந்தவுடன் உடனே தாமதமின்றி புகார்கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. 15.7.2018 அன்று 7.30 மணிக்கு என் மருமகள் அ.சா.1 என் மகனுக்கு போன் செய்த போது முதலாம் எதிரி அங்கு

வருவதாக சொன்னதாக என்னிடம் கூறியிருந்தால் உடனே நான் மகனை அந்த இடத்தில் இருந்து வரசொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் நான் சொல்லாத பல விசயங்களை குற்றப்பத்திரிக்யில் இல்லாத விசயங்களையும் முதல் முறையாக கூறியுள்ளேன் என்றாலும் அது நம்ப தகந்தது அல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியமி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.